செ.வெ.எண் : 926 நாள் : 06.12.2017

**மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளும் 07.12.2017 முதல் வழக்கம் போல் நடைபெறும்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---------

ஒகி புயல் காரணமாக ஏற்பட்ட சேதங்களை சீரமைத்திடும் விதமாக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி வளாகத்தில் வீழ்ந்துள்ள மரங்களை இரண்டு தினங்களில் முழுமையாக அப்புறப்படுத்தி மாணாக்கர்களின் கல்வி நலன் பாதிக்காத அளவில் பள்ளியினை சீர் செய்திட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழை, புயல் காரணமாக காணாமல் போன மற்றும் சேதமடைந்த பள்ளி மாணாக்கர்களின் புத்தகங்கள், சீருடை, நோட்டுபுத்தகங்கள் அனைத்தும் அந்தந்த தலைமையாசிரியர் வழி மாவட்டக் கல்வி அலுவலகத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டவுடன் அனைத்து பொருட்களும் புதிதாக மாணாக்கர்களுக்கு வழங்கப்பட துரித நடவழக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

11-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு தேர்வுகள் திட்டமிட்டப்படி நடைபெறும். மேலும் அனைத்து பள்ளிகளும் 07.12.2017 முதல் வழக்கம் போல் நடைபெறும்.

மழை, புயல் சேதம் காரணமாக இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி சான்றிதழ்கள் சேதம் அடைந்திருப்பின் அது குறித்த விவரங்களை உரிய அலுவலரிடம் சான்று பெற்று முதன்மைக் கல்வி அலுவலகத்தில் தெரிவிக்கப்படும் பட்சத்தில் அவற்றுக்கான இரண்டாம்படி நகல் பெற்று வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி.**